


தீவிரமான நாசகாரப் பணிகளைத் திட்டமிட்டு ஜமா இஸ்லாமியா செய்ய ஆரம்பித்தது, 2000-ம் ஆண்டில்தான். அதற்கு முந்தைய காரியங்கள் எதுவும் அத்தனை தூரம் பொருட்படுத்தத் தகுந்ததாக இல்லை. சிறுசிறு குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூடுகள் என்று முன்பும் இயங்கிக் கொண்டுதான் இருந்தார்கள் என்றாலும், உண்மையில் அந்தக் காலகட்டத்தை ஒரு நெட் ப்ராக்டிஸ் காலமாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது. மத்தியக் கிழக்கிலும் தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் மிகப் பலமான நெட் ஒர்க்கை உருவாக்கி வைத்துக் கொண்ட பின்னர்தான் ஜமா இஸ்லாமியா தன் திருவிளையாடல்களைத் தொடங்கியது.

அந்த வருடம் ஆகஸ்ட் முதல் தேதியைத் தம் செயல் பிரகடனத்துக்கு உரிய தினமாக ஜமா தேர்ந்தெடுத்திருந்தது.

இந்தோனேஷியாவுக்கான பிலிப்பைன்ஸ் நாட்டுத் தூதுவர் லியோனிடஸ் கேடே (Leonides Caday) என்பவரைத் தீர்த்துக்கட்டி விடுவதாக முடிவு செய்தது, ஜமாவின் முடிவெடுக்கும் தலைமைக் குழு.

அபூபக்கர் பஷீரின் ஆரம்பகால சிஷ்யர்களில் ஒருவனும், ஜமா இஸ்லாமியாவின் வெடிகுண்டு இன்ஜினீயருமான அல் கோஸி (AlGhozi) என்பவன், இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஃபதுர் ரெஹ்மான் அல் கோஸி, ராண்டி அலி, சாலி ஜமீல், எட்ரிஸ் அன்வர் ரோடின், மைக் என்று பல பெயர்கள் கொண்ட அல் கோஸி, 1971-ம் ஆண்டு பிப்ரவரி 17-ம் தேதி கிழக்கு ஜாவாவில் பிறந்தவன். சோலோ என்ற இடத்தில் இயங்கிய பஷீரின் மதப்பள்ளியில் படித்த காலத்திலிருந்தே அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருந்தவன். சுமார் ஆறு வருடங்கள் பஷீரின் நிழலிலேயே படித்து வளர்ந்த அல் கோஸி, அடிப்படையிலேயே தீவிரவாத மனோபாவம் கொண்டவனாக இருந்தான்.

எண்பதுகளின் மத்தியில் பஷீர் அவனை ஆப்கனிஸ்தானுக்கு அனுப்பி, ஒசாமா பின்லேடனிடம் ஆயுதப் பயிற்சி எடுத்துக் கொள்ளச் செய்ததாக ஒரு குறிப்பு இருக்கிறது. ஆப்கனிஸ்தான் ரு பாகிஸ்தான் எல்லையில் அமைந்திருந்த அப்போதைய ஆப்கன் போராளிகளின் பயிற்சி முகாம்களில் கலந்து கொண்டு ஆயுதப் பயிற்சி பெற்றுத் தேர்ந்த அல் கோஸி, மலேசியாவுக்குப் போனான். மலேசியாவில் அவன் பயின்றது, குண்டு தயாரிக்கும் கலை.

பிலிப்பைன்ஸில் இயங்கி வந்த மோரோ இஸ்லாமிக் லிபரேஷன் ஃப்ரண்ட் (விமிலிதி) என்கிற அமைப்பின் உறுப்பினர்கள் சிலர், அப்போது மலேசியாவில் முகாமிட்டு மேற்படி ‘சமூக

சேவை'யைச் செய்து வந்தார்கள். யாருடைய உதவியினாலோ, அல் கோஸி இந்தக் குழுவுக்கு அறிமுகமாகி, கொஞ்ச காலத்திலேயே குண்டு தயாரிப்பில் வித்தகம் காட்டினான்.

விளைவு, மோரோ ஆட்கள் அவனை பிலிப்பைன்ஸுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தார்கள்.

சலாமத் ஹஸிம் (Salamat Hashim) என்பவரின் தலைமையில் இயங்கி வந்த மோரோ குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அல் கோஸி வந்து சேர்ந்தபோது, அவனுக்கு இரண்டு வாய்ப்புகள் அல்லது கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. ஒன்று, அவன் மோரோவின் உறுப்பினராக இணைந்து, பிலிப்பைன்ஸிலேயே செட்டில் ஆகிவிடலாம். அல்லது, குண்டு தயாரிப்புக் கலையில் மாஸ்டர் டிகிரி பெற்றுக் கொண்டு இந்தோனேஷியாவுக்குப் போனால், அங்கே மோரோவும் வேரூன்றிச் செயல்பட ஏதாவது உதவி செய்வது.

அல் கோஸி இரண்டையுமே ஏற்றுக்கொண்டு, முதலில் சில காலம் பிலிப்பைன்ஸிலேயே தங்கி மோரோவுக்காகப் பணியாற்றினான். என்ன செய்தான் என்கிற விவரம் தெரியவில்லை என்றாலும், ஓரிரண்டு வருடங்களில் தெற்காசியாவின் மாஸ்டர் பாம் மேக்கர் என்கிற பெயரைப் பெற்று விட்டான். இன்றைக்கு வரை மோரோ, ஜமா உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத இயக்கங்கள் பயன்படுத்தும் வெடிகுண்டுத் தொழில் நுட்பத்தின் மூளைகளுள் அல் கோஸியின் மூளையும் ஒன்று.

அங்ஙனம் தொழில் கற்று, கற்ற இடத்துக்குக் கொஞ்சம் விசுவாசமாக வேலையும் பார்த்துவிட்டு, தொண்ணூறுகளின் இறுதியில் இந்தோனேஷியாவுக்கு வந்த அல் கோஸி, தனது பழைய வாத்தியார் அபூபக்கர் பஷீரைச் சந்தித்து, அவருடைய ஜமா இஸ்லாமியாவில் தன்னை இணைத்துக் கொண்டான்.

ஜமாவின் முதல் அதிகாரபூர்வத் தாக்குதல் திட்டமான அந்த ஆகஸ்ட் 1, 2000 பிலிப்பைன்ஸ் தூதர் கொலைத் திட்டத்துக்கு குண்டு தயாரித்ததே, அவன் அங்கு மேற்கொண்ட முதல் பணி.

சிறிய சிலிண்டர் வடிவ குண்டு அது. வெளியே ஒரு வயர் மட்டும் நீட்டிக் கொண்டிருக்க, அந்த வயரின் மறுமுனை ஒரு பாட்டரியில் இணைக்கப்பட்டிருக்கும். தீ வைத்தோ, மின்சாரத்தைப் பாய்ச்சியோ அதை வெடிக்கச் செய்ய வேண்டுமென்பதில்லை. பத்தடி தூரத்திலிருந்து வரும் மொபைல் போன் சிக்னல் இருந்தாலே போதும். உயர் தொழில் நுட்ப குண்டு அது. மேற்கு ஜாவாவில் உள்ள சைர்பான் என்கிற நகரத்திலிருந்து அந்த குண்டை ஒரு வேனில் ஏற்றி, ஜகார்த்தாவில் உள்ள தூதுவர் வீட்டுக்கு அனுப்பி வைத்தான் அல் கோஸி. அப்துல் ஜப்பார் என்கிற முப்பத்து மூன்று வயதான இளைஞன், அந்த வண்டியை ஓட்டிச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தான். அவனுக்கு இடப்பட்டிருந்த கட்டளை இதுதான். வண்டியை தூதுவர் வீட்டு வாசலில் கொண்டுபோய் நிறுத்து. என்ன ஏது என்று செக்யூரிட்டிகள் விசாரிக்க வருவார்கள். உடனே மொபைலை எடுத்துப் பேசுவதுபோல டயல் செய்தபடி அங்கிருந்து ஓடத் தொடங்கிவிடு.

மின்னலைகள் வண்டியைத் தாக்கும்போது, குண்டு வெடிக்கும். செக்யூரிட்டிகள் முதலில் சொர்க்கம் புகுவார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து தூதுவரும் போய்ச் சேருவார். வீடே காலியாகிவிடும்.

சொன்னபடிதான் அவன் செய்தான். நேரே வண்டியை அந்தப் பிலிப்பைன்ஸ் தூதர் வீட்டு வாசலுக்கு ஓட்டி வந்து நிறுத்திவிட்டு இறங்கினான். இறங்கிய வேகத்தில் மொபைலை எடுத்து இயக்கியபடியே ஓடத் தொடங்கினான். யார் என்ன ஏது என்று தெரியாத செக்யூரிட்டிகள் வண்டியருகே வர, அது பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

நல்ல வேளையாக தூதுவர் இறக்கவில்லை. வேறு இருவர் இறந்து போக, சுமார் இருபது பேர் (தூதுவர் உள்பட) படுகாயமடைந்து உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

திட்டமிட்டபடி பிலிப்பைன்ஸ் தூதரைக் கொல்ல முடியாமல் போனாலும், ஜமா இஸ்லாமியா என்கிற இயக்கத்தின் இருப்பும் செயல்பாடும் பற்றி முதல் முதலில் இந்தச் சம்பவத்தின் மூலம்தான் உலகம் அறிந்து கொண்டது. ரிதுவன் இஜாமுத்தீன் என்கிற ஹம்பாலி எத்தனை அபாயகரமான மனிதர், அவரது படையில் இருப்போர் எத்தனை வீரியம் மிக்கவர்கள் என்பது குறித்தெல்லாம் இந்தோனேஷியக் காவல் துறை ஆராயத் தொடங்கியதும் இதன் பிறகுதான்.

இது ஒருபுறமிருக்க, அத்தனை கஷ்டப்பட்டுத் தயாரித்த குண்டு வீணாகிவிட்டதே என்று அல் கோஸி மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். திட்டத்தில் எந்தப் பிசகும் இல்லை. சரியாக வண்டியை நிறுத்தச் சொன்ன இடத்தில் நிறுத்தியிருக்கிறான். வெடிக்கச் சொன்ன நேரத்தில் வெடித்திருக்கிறான். தப்பிச் செல்லச் சொன்னபடியே தப்பித்தும் போய்விட்டான். எல்லாமே சரிதான். ஆனால், தூதர் இருப்பார் என்று எதிர்பார்த்த முன்னறையில் அவர் இல்லாமல், ஓர் அறை உள்ளே தள்ளி இருந்து ஓடி வந்தபடியால்தான் தப்பித்து விட்டார். அதற்கென்ன செய்ய முடியும்?

அல் கோஸியைச் சமாதானப்படுத்தி, உடனடியாக அவனுக்கு இன்னொரு பெரிய வேலையை அளித்தார் ஹம்பாலி. அதுதான் டிசம்பர் 30 – மணிலா தொடர் குண்டு வெடிப்புச் சம்பவம்.

பிலிப்பைன்ஸில் டிசம்பர் 30 என்பது தேசிய விடுமுறை தினம். பிலிப்பைன்ஸின் தந்தை என்று கொண்டாடப்படும் ஜோஸ் ரிஸல் (Jose Rizal) என்பவரின் நினைவு தினம்.

அந்தத் தினத்தை ஒரு மறக்க முடியாத கறுப்பு தினமாக்கிவிட முடிவு செய்து, மணிலாவில் வேறு வேறு இடங்களில் ஒரே நாளில் வெடிக்கும்படி குண்டு வைக்க அல் கோஸிக்கு உத்தரவானது.

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவில் ஐந்து முக்கிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, மலேட் என்கிற இடத்தில் அமைந்திருந்த அமெரிக்கத் தூதரகத்துக்குச் சில அடிகள் தள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஒரு வர்த்தக மையம்.

அடுத்தது, மக்காடி என்கிற இடத்தில் ஒரு பெட் ரோல் பங்க். மூன்றாவது, நிநாய் அக்கினோ விமான நிலையத்தின் கார்கோ பிரிவு. மக்காடியிலேயே ஒரு ஹோட்டல் வளாகம்.

இடங்களைத் தேர்ந்தெடுத்தபின் எம்மாதிரியான குண்டைக் கொண்டு வைக்கலாம் என்று அல் கோஸி யோசித்தான். பிரமாதமான டெக்னாலஜியெல்லாம் இம்முறை வேண்டாம் என்று முடிவு செய்து, சாதாரண ப்ளாக் பவுடரைக் கொண்டே குண்டுகளைத் தயாரித்தான். ஒவ்வொன்றும் ஒரு கிலோ அளவுள்ள குண்டு மூட்டை.

பிலிப்பைன்ஸைப் பொறுத்தவரை அது அவனது இரண்டாவது தாயகம் மாதிரி. ஏற்கெனவே மோரோவில் உறுப்பினராக இருந்து பழகிய வருடங்கள் உண்டு என்பதால், மோரோ போராளிகளின் உதவியும் அவனுக்குக் கணிசமாகக் கிடைத்தது. நிதானமாக வாரக்கணக்கில் உட்கார்ந்து யோசித்து, இடங்களைத் தேர்ந்தெடுத்து, குண்டுகள் தயாரித்துப் பல்வேறு நண்பர்களின் உதவியுடன் அவற்றை உரிய இடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு, வெடிக்கச் செய்யலாம் என்று முடிவு செய்து தலை நிமிர்ந்தபோது, அந்த 30-ம் தேதி விடிந்திருந்தது.

திட்டமிட்டபடி ஐந்து குண்டுகளில் ஒன்று கூட சொதப்பாமல் வெடித்தது. மிகையே இன்றிச் சொல்வதென்றால், அன்றைய தினம் மணிலாவும் பிலிப்பைன்ஸும் மயானம் மாதிரி காட்சியளித்தன. குண்டு வெடித்த சாலைகள் மட்டுமல்ல. தேசத்தின் ஒட்டுமொத்தச் சாலைகளுமே ஆளரவமற்றுப் போய்விட்டன. இருபத்திரண்டு பேர் இறந்திருந்தார்கள். எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்து கதறிக் கொண்டிருந்தார்கள். குண்டு வெடித்த இடத்துக்கு அருகே இருந்த கடைகளெல்லாம் சிதறி உதிர்ந்திருந்தன. எங்குப் பார்த்தாலும்

போலீஸ். சைரன். ஆம்புலன்ஸ். ஸ்டிரெச்சர்.

அல் கோஸிக்கு ஒரு சௌகரியம் இருந்தது. வேலை மெனக்கெட்டு இந்தோனேஷிய ஜமா இஸ்லாமியா பிலிப்பைன்ஸுக்கு வந்து, குண்டு வைக்கும் என்று உடனடியாக யாரும் நினைத்துப் பார்க்க முடியாது. சட்டென்று மோரோ இஸ்லாமிக் லிபரேஷன் மீதோ, மோரோ தேசிய லிபரேஷன் மீதோதான் சந்தேகம் வரும். அவர்களைத்தான் குறிவைத்துத் தேடுவார்கள். அந்த சைக்கிள் கேப்பில் தாம் தப்பித்துவிட முடியும் என்று அவன் கணக்குப் போட்டிருந்தான்.

அந்தக் கணக்கு அப்படியொன்றும் சோடை போய்விடவில்லை. எதிர்பார்த்தபடியே பிலிப்பைன்ஸ் காவல் துறை முதலில் மோரோக்களைத்தான் குறிவைத்துத் தேடத் தொடங்கியது. ஆட்களையும் ஆதாரங்களையும்.

மோரோக்கள் உடனடியாக மறுப்பு அறிக்கை விடுத்து, தங்களுக்கும் குறிப்பிட்ட தாக்குதலுக்கும் சம்பந்தமில்லை; இப்போது இப்படியொரு கொடூரமான தாக்குதலில் ஈடுபடுவதற்கு உரிய காரணமும் இல்லை என்று சொல்லிவிட்டன. (இவர்களைப் பற்றிப் பின்னால் விரிவாகப் பார்க்கப் போகிறோம். இப்போது பெயரளவில் தெரிந்துகொண்டால் போதும்.)

தவிரவும் தாக்குதலில் பிசிறே இல்லாமல் இருந்தது, வெடித்த குண்டின் தன்மை, ரசாயனப் பொருள் கலவையில் தெரிந்த அன்னிய மண் வாசனை, இன்னபிற காரணங்களைக் கொண்டு சற்றுத் தாமதமாகத்தான் பிலிப்பைன்ஸ் காவல் துறை ஜமா இஸ்லாமியாவின் மீது கவனம் குவித்தது.

அதற்குள் அல் கோஸி, பிலிப்பைன்ஸிலிருந்து தப்பித்துவிட்டிருந்தான். நேரே அங்கிருந்து சிங்கப்பூர் சென்று சில வாரங்கள் அங்கே சுற்றிக் கொண்டிருந்து விட்டு, மலேசியா எல்லையை நடந்தே கடந்து, அங்கிருந்து இந்தோனேஷியாவுக்கு வந்து ஜகார்த்தாவிலும் ஜாவாவிலும் மாறி மாறித் தங்கி இருந்துவிட்டு, ஜமாவின் தலைமையகத்துக்குப் போய் அடைக்கலமாகிவிட்டான்.

இரண்டு வருடங்கள் கழித்து (2002, ஜனவரி-15) அதே பிலிப்பைன்ஸ், அதே மணிலாவில், விமான நிலையத்தில் பாங்காக் போக இருந்தவன் கடைசி நிமிடத்தில் கைதாகி, அதற்கு அடுத்த வருடம் சிறையிலிருந்து தப்பித்துப் போகுமுன்னர் அளித்த ஒரு சில வாக்குமூலங்கள்தான், இன்றைக்கு நாம் ஜமா இஸ்லாமியாவின் தொடக்க காலத் தாக்குதல் திட்டங்கள் குறித்து ஓரளவு தெளிவாக அறிந்து கொள்ள உதவி செய்யும் முக்கிய ஆதாரங்கள்.